# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in

<u>முன்னிலை : திரு.ஆ. தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்</u>

<u>மேல் முறையீட்டு மனு எண் 16 / 2016</u>

திரு. P.ரங்கநாதன்,
த/பெ. பழனிச்சாமி,
கொமாரபாளையம் அஞ்சல்,
மூலனூர் – வழி,
தாராபுரம் வட்டம் – 638 106. ...... மேல் முறையீட்டாளர்
(திரு. D. ராஜேந்திரன்)

எதிர்

செயற்பொறியாளர்/இ & ப,
தாராபுரம்,
உடுமலைப்பேட்டை மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
TANGEDCO Complex,
உடுமலைப்பேட்டை ரோடு,
தாராபுரம் – 638 656. ..... எதிர் மனுதாரார்
(திரு. G. முருகானந்தன், செயற்பொறியாளர்/தாராபுரம்)

<u>கேட்புரை நாள் – 24.5.2016</u>

<u>ஆணை நாள் – 22.7.2016</u>

திரு. P.ரங்கநாதன், கொமாரபாளையம் அவர்களின் 23.2.2016 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண். 16/2016 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 24.5.2016 அன்று நடத்தப்பட்டது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர் மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும்

இருதரப்பினராலும், கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து , மின் குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

**1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

i. நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் ஆணையை ரத்து செய்ய வேண்டும்.

ii. சர்வே எண். 3/1Bல் புதிய விவசாய மின் இணைப்பு அவருக்கு வழங்க வேண்டும்.

**2. வழக்கின் சுருக்கம்:**

2.1 மேல்முறையீட்டாளர் க.ச எண். 3/1Aல் உள்ள கிணற்றிற்கு விவசாய மின் இணைப்பு வேண்டி விண்ணப்பம் அளித்துள்ளார். அந்த விண்ணப்பத்தின் பதிவு எண். 324/4.12.1999 ஆகும்.

2.2 மேற்படி விவசாய விண்ணப்பத்திற்கு தயார் நிலையை பதிவு செய்ய அறிவிப்பு 11.11.2010 ல் வழங்கப்பட்டுள்ளது. மேல்முறையீட்டாளர் மேற்கண்ட விவசாய விண்ணபத்திற்கு அவருக்கு பாத்தியப்பட்ட க.ச எண். 3/1Bல் உள்ள கிணற்றிற்கு மின் இணைப்பு வழங்க வேண்டும் என்று மாற்றல் கோரி விண்ணப்பித்துள்ளார்.

2.3 க.ச எண். 3/1Aல் ஏற்கனவே உள்ள 372–002–124 என்ற விவசாய மின் இணைப்பில், மனுதாரருக்கு பாத்தியம் உள்ளதால், அவருடைய கோரிக்கை ஏற்கப்படவில்லை.

2.4 மேல்முறையீட்டாளர், உடுமலைப்பேட்டை மின்பகிர்மான வட்டத்தின், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு தன்னுடைய 23.10.2015 நாளிட்ட முறையீட்டை சமர்ப்பித்துள்ளார்.

2.5 மன்றம் தன்னுடைய தீர்வை 25.1.2016 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது.

2.6 மன்றத்தின் ஆணையில் அதிருப்தியுற்ற மேல்முறையீட்டாளர், இந்த மேல்முறையீட்டு மனுவை, மின்குறைதீர்ப்பாளர் முன்பாக சமர்ப்பித்துள்ளார்.

**3.** **<u>மன்றத்தின் தீர்வு:</u>**

உடுமலைபேட்டை மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் 25.1.2016 நாளிட்ட தீர்ப்புரையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> ***“மன்றத்தின் தீர்ப்புரை :***
> *விண்ணப்பதாரர் பெயரில் உள்ள ஆவணங்களின் அடிப்படையில் தந்தையாருக்கு பாத்தியப்பட்ட முழு பாகமும் திரு.ரங்கநாதன் அவர்களுக்கு பட்டா எண்.2110 ன்படி, க.ச எண். 3/1A ல் உள்ள முழு பாகமும் பாத்தியப்பட்டுள்ளதாலும் மின் இணைப்பில் சரிபாதி பாத்தியம் உள்ளதாலும் தற்போதுள்ள வாரிய விதிகள் (1) Lr.No.SE/RE&I(d)/EE/ RE/A1/ F.DOC/D/.986/11 DT.22.07.2011மற்றும் (2) Lr.No.SE/RE&I(d)/ EE/RE/A1 / F.DOC/ D/652/13 DT.02.09.2013 ன்படி அதே கிணற்றுக்கு ரங்கநாதன் பெயரில் மின் இணைப்பு வழங்கவோ வேறு கிணற்றுக்கு மாற்றம் செய்யவோ இயலாது என தீர்மானிக்கப்படுகிறது.*
> *xxx xxx xxx xxx”*

**4.** **<u>மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள்:</u>**

4.1 விவசாய மின் இணைப்பு எண்.372–002–124 தாராபுரம் வட்டம் எம்.குமாரபாளையம் கிராமத்தில் க.ச எண். 3/1A ல் 04.04.1988–ம் ஆண்டு 3எச்.பி இணைப்புடன் அவரது தகப்பனார் 1.திரு.பழனிச்சாமி கவுண்டர் 2.திரு.துரைராஜ் நாச்சிமுத்து கவுண்டர் 3. திரு.டி.பழனிச்சாமி 4. திரு. D. லோகநாதன் ஆகியோருக்கு கூட்டாக வழங்கப்பட்டது. மேற்படி கிணறு மற்றும் மின் இணைப்பில் 6ல் 3 பாகம் அவரது தகப்பனார் திரு. பழனிசாமி கவுண்டருக்கும், இதர 3 பாகம் முறையே திரு. துரைராஜ் நாச்சி முத்துக் கவுண்டர், திரு. D.பழனிசாமி, திரு. லோகநாதன் ஆகியோருக்கு தலா 3ல் 1 பாகம் சொந்தம் உள்ளது. இந்நிலையில் 29.04.91ல் அவருக்கும் அவரது தகப்பனார் திரு.பழனிசாமி கவுண்டர் மற்றும் அவரது சகோதரர் திரு. பாலகிருஷ்ணன் ஆகியோருக்கு இடையில் ஏற்பட்ட குடும்ப பாகப் பிரிவினை பத்திரப்படி மேற்படி க.ச எண். 3/1A ல் உள்ள கிணறு மற்றும் அதில் உள்ள 3 எச்.பி மின் மோட்டரில் ஆளுக்கு 6ல் 1 பாகம் உரிமை என பாகம் பிரித்து கொண்டார்கள். மேலும் மேற்படி பாகப் பிரிவினையின் படி அவரது பி.ஷெட்யூல் பாகத்திற்கு 3 ஏக்கர் 55 செண்ட புஞ்சை நிலம் கிடைக்கப்பெற்றது.

4.2 க.ச எண். 3/1A ல் உள்ள கிணறு மற்றும் மோட்டார் ஆகியவை பொதுவில் 6 நபர்களுக்கு உரிமை உள்ளதாக இருந்தபடியாலும், அனைவரும் விவசாயம் செய்ய 3எச்பி மோட்டார் போதுமானதாக இல்லை என்பதாலும், ஆறு நபர்களுக்கு உள்ள கிணற்றில் இருந்து ஒரு மோட்டார் மூலம் தண்ணீர் இறைப்பதில் பிரச்சனைகள் மற்றும் சண்டை சச்சரவு ஏற்பட்டதாலும், அவருக்கு என தனியே 6ல் 1 பாகம் பாகப்பிரிவினை மூலம் கிடைத்தாலும், அவரது பாகத்திற்கு என 3.55 ஏக்கர் நிலம் இருந்ததாலும் விவசாயத்தை நல்ல முறையில் விரிவாக செய்ய வேண்டும் என்ற காரணத்தினால் பாகப் பிரிவினை ஏற்பட்டு எட்டு ஆண்டுகளுக்கு பின் அவரது 6ல் 1 பாகம் கிணறு உரிமையை அடிப்படையாக கொண்டு 4.12.1999 ல் 5 எச்.பி. விவசாய மின் இணைப்பு விண்ணப்பம் பதிவு செய்துள்ளார். அவரது விவசாய விண்ணப்பம் பதிவு எண். 324/ நாள் 04.12.99 ஆகும்.

4.3 இந்த நிலையில் 07.09.2002–ல் அவரது தந்தையர் திரு.பழனிசாமி கவுண்டர் அவர்கள் காலமாகிவிட்டார். பின்னர் காலப்போக்கில் அவரது தமையனார் திரு.பாலகிருஷ்ணன் அவர்கள் அவருக்கு பாத்தியமான சொத்தையும், கிணறு மற்றும் மின்மோட்டார் இணைப்பு எண். 124ல் உள்ள உரிமையை விற்பனை செய்ய முன்வந்தபோது குடும்ப சொத்து வெளி நபருக்கு சென்று விடக் கூடாது என்ற காரணத்திற்காக அவரிடமிருந்து சில சொத்துக்களையும் க.ச எண். 3/1A ல் உள்ள கிணறு மற்றும் மின் மோட்டார் பாகம் 6ல் 1 பங்கு 13.09.2007ல் கிரையம் பெற்றுள்ளார். மேலும் அதே நாளில் காலம் சென்ற அவரது தகப்பனாரின் 6ல் 1 பங்கு கிணறு மற்றும் மின் மோட்டார் பாகத்தையும் அவரது தகப்பனாரின் வாரிசுகளான அவரது தாயார், சகோதரி மற்றும் அவரது சகோதாரர் பாலகிருஷ்ணன் ஆகிய மூவரிடமும் கிரையம் பெற்றார். இதன் மூலம் 6–ல் 2 பாகம் அவரது 6ல் 1 பாகத்துடன் சேர்ந்து அவருக்கு 6ல் 3 பாகம் பாத்தியப்பட்டுள்ளது. மேற்படி மின் மோட்டார் கிணறு ஆகியவற்றில் 6ல் 2 பாகம் அவர் 1999 விவசாய மின் இணைப்பு விண்ணப்பம் அளித்த பின்பு குடும்ப சூழ்நிலை காரணமாக 2007ல் கிரையம் பெற்றதாகும்.

4.4 விவசாய மின் இணைப்பு வழங்க தயார் நிலை பதிவு செய்யும் படி செயற்பொறியாளர்இ.ப/ தாராபுரம் அவர்கள் கடிதம் எண்.செபொ/தொ.நு.2/கட்டு.விவசாயம்/அ.எண்.89/10 நாள் 30.10.10 சர்பிடிகேட் ஆப் போஸ்டிங் மூலம் 11.11.2010ல் வழங்கப்பட்டது. பின்னர் அதே போன்று நினைவூட்டுதல் கடிதம் 4.08.2011ல் வழங்கப்பட்டது. 2013ல் அவர் தயார்நிலை

பதிவு செய்ய வடுகப்பட்டி பிரிவு அலுவலகம் சென்ற போது ஒரு கிணற்றில் வேறு ஒரு மின் இணைப்பு அவருக்கு வழங்க மின்வாரிய விதிகள் அனுமதிக்க வில்லை என்றும் எனவே விவசாய விண்ணபத்தின் கிணறு சர்வே எண்.3/1ஏல் இருந்து வேறு சர்வேக்கு மாற்றம் செய்து விண்ணபம் வாங்க கூறியதால் செப்டம்பர் 2013ம் ஆண்டு சர்வே எண் மாற்றம் கோரி வடுகப்பட்டி பிரிவு அலுவலகத்தில் விண்ணப்பம் அளித்தார். ஆனால் சர்வே எண் மாற்றம் குறித்து எந்த பதிலும் அவருக்கு வழங்கப்படவில்லை. அலுவலகத்தில் பலமுறை நடந்து விசாரித்த போது அவரது சர்வே எண் மாற்ற விண்ணபம் வழிமுறையாக பிரிவு அலுவலகம் மூலமாக உதவி செயற்பொளியாளர் அலுவலகம் சென்று பின்பு செயற்பொறியாளர் அலுவலகத்தில் இருப்பதாகவும், சர்வே எண் மாற்ற உத்தரவு வழங்கப்படும் என கூறினார்கள். ஆனால் அதுபோல் சர்வே மாற்ற உத்தரவு எதுவும் செயற்பொறியாளர் அலுவலகம் தாராபுரத்தில் இருந்து 2015 வரை கிடைக்கப் பெறவில்லை. சர்வே மாற்ற ஆணை வழங்கப் படாததினால் தயார் நிலை சான்றை அவரால் உரிய காலத்தில் பதிவு செய்ய இயலவில்லை.

4.5 தயார் நிலை பதிவு செய்ய அனுமதிக்கப்பட்டுள்ள கூடுதல் 5 ஆண்டுகால அளவு 2015ல் முடிந்து விட்டால் மின் இணைப்பு பெற இயலாது என்பதாலும் சர்வே எண் மாற்றம் குறித்து எந்த பதிலும் வழங்க செயற்பொறியாளர் தாராபுரம் அவர்கள் முன் வராததாலும் அவரது விண்ணபத்தின் நிலை என்ன என்று அறிவதற்காக 28.08.2015ல் தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலம் விண்ணப்பம் ஒன்றினை பொதுத்தகவல் அலுவலர், செயற்பொறியாளர் அலுவலகம் தாராபுரம் அவர்களுக்கு அனுப்பினார். மேற்படி விண்ணப்பம் வினா எண் 3ல் சர்வே எண்.3/1ஏ–ல் இருந்து 3/1 பிக்கு மாற்ற கோரி 2013ல் கொடுக்கப்பட்ட விண்ணபத்திற்கு இதுவரை எந்தவித பதிலும் பெறப்படவில்லை, எனது விண்ணப்பம் பரிந்துரைக்கப்பட்டு சர்வே எண் மாற்றம் செய்யப்பட்டதா ? இல்லையேனில் அதற்கான உரிய காரணத்தை தெரிவிக்கப்பட்டதா அவ்வாறு தெரிவிக்கப்பட்டிருந்தால் அதற்கான நகலினை வழங்க கோரப்படுகிறது என வினவியிருந்தார். மேற்படி வினாவிற்கு செயற்பொறியாளர்/தாராபுரம் (பொதுத்தகவல் அலுவலர்) அவர்கள் கடித எண். செபொ/இப/தாரை/உநி.அ/கோ.த.அஉச/ அ.எண்.004610/2015 நாள் : 6.10.2015 ன் மூலம் வினா 3 க்கு வழங்கிய பதிலில் தாங்கள் அளித்த விண்ணப்பம் மின் இணைப்பு உள்ளதை மறைத்து விண்ணப்பம் பதிவு செய்ததாக (Duplicate Application) எடுத்துக் கொள்ளப்

படுகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அவரது சர்வே எண் மாற்ற விண்ணப்பம் நிராகரிப்பட்டதை அறிந்து கொள்ள முடிந்தது.

4.6 மேலும் 11.09.2015ல் தயார் நிலை பதிவு செய்ய கால நீட்டிப்பு கோரி கடிதம் ஒன்றினை தனித்தனியே உதவிமின் பொறியாளர் வடுகப்பட்டி, உதவி செயற்பொறியாளர் மூலனூர், செயற்பொறியாளர் தாராபுரம், மேற்பார்வை பொறியாளர் உடுமலைப்பேட்டை, தலைமைப்பொறியாளர் கோயம்புத்தூர் ஆகிய அனைவருக்கும் அனுப்பியுள்ளார். மேற்படி கால நீட்டிப்பு கோரும் அவரது விண்ணப்பத்திற்கு தலைமை பொறியாளர் கோயம்புத்தூர் அவர்கள் சார்பாக செயற்பொறியாளர் தாராபுரம் அவர்கள் க.எண்.செ.பொ/இ&ப/ தாரை/ நெ.து.2/கோ32/புகார் வி.எ/2015 நாள் 15.10.2015 மூலம் வழங்கிய பதிலில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பான விண்ணப்பத்திற்கு பதில் வழங்கிய அதே பதிலை வழங்கி, தாங்கள் அளித்த விண்ணப்பம் மின் இணைப்பு உள்ளதை மறைத்து விண்ணப்பம் பதிவு செய்ததாக (Duplicate Application) எடுத்துக் கொள்ளப்படுகிறது. எனவே வாரிய விதிகளின் படி தங்கள் பெயரில் மேற்கண்ட விண்ணபத்திற்கு மின் இணைப்பு வழங்க இயலாது என்பதை தங்களுக்கு அன்புடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது என கூறப்பட்டுள்ளது. இதன் மூலம் சர்வே மாற்றம் செய்ய வேண்டும் என்ற அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதுடன் 1999ல் பதிவு செய்து காலமுறையில் அவரது வரிசையில் வழங்கப்படவேண்டிய விண்ணப்பத்தையும் Duplicate Application ஆக எடுத்துக் கொள்ளப்படும் என தெரிவித்து விண்ணப்ப முதன்மையை ரத்து செய்து மின் இணைப்பு வழங்க இயலாது என தெரிவித்துள்ளனர்.

4.7 மின் இணைப்பு உள்ள கிணற்றில் பாதிபாகம் அவருக்கு பாத்தியப்பட்டாலும், மீதி பாதி பாகம் 6–ல் 3 பங்கு இதர மூன்று நபர்களுக்கு பாத்தியமானதாகும். கிணறும் மோட்டாரும், அவருக்கு மட்டும் முழுமையான பாத்தியமானது அல்ல. அவர் வேண்டுமென்றே உண்மையை மறைத்து விண்ணப்பம் கொடுத்தார் என்பது தவறு.

4.8 1999ல் விண்ணப்பித்து 11 ஆண்டுகளுக்கு பின் 2010ல் மின் இணைப்பு பெற தயார்நிலை பதிவு செய்யும் படி கோரப்பட்டார். மின் இணைப்பு பதிவு என்பது கிணற்றின் சர்வே எண்னை அடிப்படையாக கொண்டது அல்ல. அது விண்ணப்பிக்கும் நபரின் உரிமையை பதிவு செய்வதாகும். விண்ணப்பிக்கும் இடத்தில் தான் மின் இணைப்பு பெற வேண்டும் என்பது சட்டமும் இல்லை, கட்டாயமும் இல்லை தேவைக்குஏற்ப, விவசாய நிலம் பயிர்

செய்வதற்கு ஏற்ற வகையில் விண்ணப்பதாரர் எந்த இடத்திலும் வரிசைப்படியான முதன்மையை விட்டுதராமல் மின் இணைப்பு பெற உரிமை உண்டு இதை மின்சார சட்டமோ அதன் வழியில் இயற்றப்பட்ட மின் வழங்கல் (Supply code) விதி மற்றும் பகிர்மான விதி (Distribution code) எதுவும் தடுக்காத நிலையில், மின்சார வாரியம் அல்லது மின்பகிர்மான கழகத்தின் எந்த விதியும் தடுக்க முடியாது.

4.9 மின்சார சட்டம் 2003 இயற்றப்பட்ட பின் மின்சார தொழிலை ஒழுங்குப்படுத்த தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் ஏற்படுத்தப்பட்ட பின் அதனால் மின் விநியோகத்தை சீர் செய்ய ஏற்ப்படுத்தப்பட்ட மின் வழங்கல் விதி மற்றும் பகிர்மான விதி மற்றும் இதர விதிகள் மற்றும் விதிமுறை மாற்றங்கள் மட்டுமே மின் நுகர்வோரையும், மின் உரிமம்தாரரையும் கட்டுப்படுத்தும். மின் விநியோகம் மற்றும் வழங்கல் விதியில் சொல்லப்படாத எந்த விதியையும் மின்வாரியமோ அல்லது மின்பகிர்மான கழகமோ ஏற்படுத்தி அதனை மின்நுகர்வோர் ஏற்க வேண்டும் என கட்டாயப்படுத்த முடியாது. அது மின்சார சட்டத்திற்கும், மின்விநியோக விதிக்கும் எதிரானது.

4.10 விவசாய மின் இணைப்பை பொறுத்து மட்டில் மின்சார ஒழுங்குமுறை ஆணையம் அவ்வப்போது தேசிய மின்சார கொள்கை (National Electric city policy) மற்றும் மாநில அரசு கொள்கை மற்றும் பொது நலன் கருதி வெளியிடும் வழிகாட்டுதல் அடிப்படையில் அவ்வப்போது, வழங்கும் என மின் விநியோக விதி (Distribution code) பிரிவு 27(1)ல் தெளிவு பட கூறி உள்ளது.

4.11 மின் இணைப்பு வழங்குவதை பொறுத்த மட்டில் மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் வழிகாட்டுதல் இறுதியானது. மின் உரிமம்தாரரின் எந்த விளக்கமோ, விதிமுறையோ மின் உபயோகிப்பாளரை கட்டுப்படுத்தாது. மின்சார விநியோக விதிகள் எதுவும் போதுமானதாக இல்லை என்றாலோ மின் உரிமம்தாரரின் சேவைக்கு ஒத்ததாக இல்லாமல் இருந்தாலோ மின்விநியோக விதிபிரிவு 51ன் படி விதிமுறைகள் பரிசீலனை குழுவிற்கு விண்ணப்பித்து விதிமுறைகளில் மாற்றம் கொண்டு வந்து நடைமுறைப்படுத்தலாமே தவிர, மின் உரிமம்தாரர் தனது விதிமுறை எதையும் மின்வினியோக விதிகளில் தன்னிச்சையாக செயல்படுத்த முடியாது. அப்படி செயல்படுத்த விரும்பினால் அது சட்டவிரோதமாகும். விதிமுறை மீறலாகும் என தெரிவித்துள்ளார்.

4.12 மேலும் மின்விநியோக விதி 50ல் மின்பகிர்மான விதிகளை மின்வழங்கல் விதி, தமிழ்நாடு மின்சார கிரிட்கோடு, சட்டத்தின் இதர பிரிவுகள் மற்றும் திருத்தங்கள், இந்த சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட விதிமுறைகளுடன் வாசிக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் மின்வாரியம்/பகிர்மான கழகத்தின் எந்த விதிமுறைகளையும் இணைத்துக் கொள்ளலாம் என எங்கும் கூறப்படவில்லை.

4.13 மின்விநியோக விதி பிரிவு 28ல் மின் உரிமம்தாரர் மின்சார சட்டம் பிரிவு 48 படி மின்சார பாதுகாப்பிற்கும், மின் உரிமம்தாரருக்கு தனிநபர் அலட்சியதால் நஷ்டம் அடையாமல் இருக்கவும் மட்டுமே விதிமுறைகள் செய்ய அனுமதிக்கிறது.

4.14 எனவே எந்த நிலையிலும் மின்வாரியம்/மின்பகிர்மான விதிமுறைகளை, விளக்கங்களை நுகர்வோரிடம் செயல்படுத்த இயலாது. அந்த அடிப்படையில் நுகர்வோர் குறைதீர்வு மன்றம் குறிப்பிட்டு மின் இணைப்பு வழங்க மறுத்துள்ள தலைமையாக SE/RE&I(d) அவர்களின் கடிதங்கள் நாள் 22.07.2011 மற்றும் 02.09.2013 ஆகியவை செல்லத்தக்கத்தல்ல அது மின்நுகர்வோரை/விண்ணப்பதாரரை கட்டுப்படுத்த கூடியதல்ல. எனவே இந்த கடிதங்களின் அடிப்படையில் நுகர்வோர் குறைதீர்மன்றம் வழங்கிய தீர்ப்பை ரத்து செய்ய வேண்டுகிறேன்.

4.15 அவர் விண்ணப்பிக்கும் போது கிணற்றில் 6ல் 1 பங்கு மட்டுமே இருந்தது பின்னர் 2007ல் தான் 6ல் 2 பங்கு மேலும் அவருக்கு உரிமையானது ஒரே கிணற்றில் மின் இணைப்பு வழங்க இயலாதென்றால் அவருக்கு சொந்தமான வேறு இடத்தில் சர்வே எண் மாற்றக் கோரும் 3/1B ல் உள்ள ஆழ்துளை கிணற்றில் மின் இணைப்பு வழங்க வேண்டுமே தவிர அவரது முதன்மையை ரத்து செய்வது மின் இணைப்பு வழங்க மறுப்பது தவறாகும் இயற்கை நியதிக்கு முரணானது.

4.16 தயார் நிலை பதிவு செய்யக் கோரும் கடிதம் 11.11.2010 ல் தான் அவருக்கு வழங்கப்பட்டது. தயார் நிலைபதிவு செய்ய அறிவிப்பு கிடைக்கப் பெற்றதில் இருந்து 5 வருடம் 90 நாட்கள் அவகாசம் உண்டு. அதன்படி 5 வருடம் 10.11.2015 வரையிலும் உண்டு. அதன் பின் 90 நாட்கள் 08.02.2016 வரை அவருக்கு அனுமதியுண்டு. ஆனால் மின் உரிமம்தாரர் அலுவலர்களான தலைமைப் பொறியாளர், செயற்பொறியாளர் தாராபுரம் உதவி

செயற்பொறியாளர், வடுகப்பட்டி உட்பட எவரும் அவரது சர்வே எண் மாற்றத்தை ஏற்காததாலும் உடுமலை திட்ட மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றமும் அவரது கோரிக்கையை ஏற்காததாலும், மின் இணைப்பு வழங்க இயலாது என தெரிவித்து விட்டதாலும் அவரால் அனுமதிக்கப்பட்ட காலத்திற்குள் தயார் நிலையை பதிவு செய்ய இயலவில்லை. நுகர்வோர் குறைதீர்ப்பு மன்றத்தின் ஆணை ஏற்கத்தக்கதல்ல என்பதால் அதனை ரத்து செய்து அவரது முதன்மையை கருத்தில் கொண்டு அவருக்கு சொந்தமான சர்வே எண். 3/பி–ல் உள்ள போர் கிணற்றில் புதிய மின் இணைப்பு வழங்க உத்திர விட வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

5. <u>எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள்:</u>

5.1 மின் இணைப்பு கோரும் கொமாரபாளையம் கிராமம், க.ச எண். 3/1Aல் உள்ள துரஸ்து கிணற்றில் ஏற்கனவே உள்ள மின்இணைப்பு எண். 372–002–124 ஆனது 3 HP பளுவுடன் திரு பழனிச்சாமி அவர்கள் பெயரில் இருந்து வருகிறது. மேற்படி கிணறு மற்றும் மின் இணைப்பில் 6ல் 3 பங்கு மனுதாரரின் தந்தை திரு பழனிசுவாமி கவுண்டருக்குப் பாத்தியப்பட்டு இருந்தது. 29.04.1991ல் ஏற்படுத்திக்கொண்ட பாகப்பிரிவினைப்படி மேற்படி கிணறு மற்றும் மின்இணைப்பில் 6ல் 1 பங்கு கிரையப்பத்திரத்தின்படி மேற்படி கிணறு மற்றும் மின்இணைப்பில் மனுதாரர் தனது தமையனார் மற்றும் சகோதரி ஆகியோரிடமிருந்து மொத்தம் 6ல் 2 பங்கை கிரையம் பெற்றதன் பேரில், மனுதாரருக்கு 6ல் 3 பங்கு உரிமை ஏற்பட்டது. இந்நிலையில் மனுதாரர் 04.12.1999 அன்று மேற்படி கிணற்றுக்கு மனுதாரர் பெயரில் தனித்து 5 HP மின்இணைப்பு வேண்டி விண்ணப்பம் செய்துள்ளார்.

5.2 மேற்படி விண்ணப்பத்தின்மீது தயார்நிலையைப் பதிவு செய்ய வேண்டி செயற்பொறியாளர்/ இ&பே/தாராபுரம் அவர்கள் 11.11.2010 தேதியிட்ட கடிதம் மூலம் மனுதாரருக்குத் தெரிவிக்கப்பட்டது. மேலும் மேற்படி தயார்நிலையைப் பதிவு செய்வது தொடர்பாக நினைவூட்டல் கடிதம் 04.08.2011 ல் வழங்கப்பட்டது.

5.3 இந்நிலையில் மனுதாரர் மேற்படி விண்ணப்பத்தினை தனக்கு பாத்தியப்பட்ட க.ச எண். 3/1-Bக்கு மாற்றல் கோரி அளித்த விண்ணப்பம் உதவிசெயற்பொறியாளர்/இ&பே/மூலனூர்

அவர்களால் எதிர்மனுதாரருக்கு அனுப்பப்பட்டது. மேற்படி கோப்பினை கூர்ந்தாய்வு செய்ததில் க.ச எண். 3/1Aல் ஏற்கனவே உள்ள 372–002–124 மின்இணைப்பில் மனுதாரருக்கு பாத்தியம் இருந்ததால் கோப்பு உதவிசெயற்பொறியாளர்/ இ&பே/மூலனூர் அவர்களுக்கு திருப்பப்பட்டது.

5.4 மேற்படி பொருள் தொடர்பாக மனுதாரர் தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005ன்படி 28.08.2015 அன்று கோரியுள்ள விபரங்கள் 06.10.2015 தேதியிட்ட கடிதத்தில் எதிர் மனுதாரரால் தெளிவாக வழங்கப்பட்டடுள்ளது.

5.5 மேற்படி கொமாரபாளையம் கிராமம் க.ச எண். 3/1Aல் உள்ள கிணற்றில் உள்ள மின்இணைப்பு எண். 372–002–124ல் மனுதாரருக்கு உரிமை இருப்பதால் மேற்படியாரின் காலநீட்டிப்பு கோரும் விண்ணப்பம் ஏற்கப்படவில்லை. மேலும் மேற்படியாரின் விவசாய விண்ணப்பம் பதிவு எண். 324/04.12.1999 எதிர்மனுதாரரின் 13.01.2016 தேதியிட்ட கடிதம் மூலம் தள்ளுபடி செய்யப்பட்டது.

5.6 மேற்படி மின்இணைப்பு கோரும் கொமாரபாளையம் கிராமம் க.ச எண். 3/1Aல் உள்ள கிணற்றில் உள்ள மின்இணைப்பு எண்.372–002–124ல் மனுதாரருக்கு உரிமை உள்ளதால் 1.Lr.No.SE/RE &I(d)/EE/RE/A1/F Doc/D 906/11 dated 22.07.2011 மற்றும் (2) Lr.No. SE/RE&(d)/EE/RE/A1/F Doc/D /652/13 dated 02.09.2013ன்படி அதே கிணற்றுக்கு மனுதாரர் பெயரில் மின்இணைப்பு வழங்கவோ வேறு கிணற்றுக்கு மாற்றம் செய்யவோ இயலாது.

5.7 ஏற்கனவே தனக்கு உரிமையுள்ள விவசாயமின் இணைப்பு உள்ள கிணற்றில் மேலும் தனது பெயரில் ஒரு விவசாய மின்இணைப்பு வேண்டி விண்ணப்பிக்கும் போதே, அந்த விண்ணப்பம் Duplicate Application ஆக இருப்பதால் அந்த விண்ணப்பம் பரிசீலனைக்கு ஏற்றதல்ல என்பதே சரியாகும்.

5.8 விண்ணப்பிக்கும் இடத்தில் தான் மின்இணைப்பு பெறவேண்டும் என்ற சட்டமும் இல்லை, கட்டாயமும் இல்லை என்பது மனுதாரரின் விண்ணப்பத்தைப் பொறுத்து ஒவ்வாததாகும். ஏற்கனவே விண்ணப்பம் செய்த கிணற்றில் தண்ணீர் இல்லை என்பதால் வேறு

கிணற்றுக்கோ ஆழ்குழாய்கிணற்றுக்கோ மாற்றல் செய்வது ஏற்புடையதாகும். ஆனால், மனுதாரர் விண்ணப்பமே Duplicate Application எனக் கருத்தில் கொள்வதால் விண்ணப்பமே செயலற்றது என்று ஆகி விடுவதால் இது பொருந்தாது.

5.9 மின்நுகர்வோரால் குறிப்பிடப்பட்டுள்ள விதிகள் அனைத்தும் மாண்புமிகு ஒழுங்குமுறை ஆணையத்தால் வகுக்கப்பட்ட கொள்கை முறையிலான வழிகாட்டிகள் ஆகும்.

5.10 அன்றாட செயல்பட்டு முறைகளுக்கான உத்தரவுகள் மின்வாரியத்தால் அவ்வப்பொழுது அளிக்கப்பட்டு வருவதின் அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

6.0 **<u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u> :**

6.1 மேல்முறையீட்டாளரும், எதிர்மனுதாரரும் தங்களுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக , மின் குறைதீர்ப்பாளரின் கேட்புரை 24.5.2016 அன்று நடைபெற்றது.

6.2 மேல்முறையீட்டாளர் சார்பில் திரு.D.ராஜேந்திரன் அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார்.

6.3 எதிர்மனுதாரர் திரு.G.முருகானந்தன், செயற்பொறியாளர், தாராபுரம் அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார்.

7.0 **<u>மேல்முறையீட்டாளரின் பிரதிநிதி கேட்புரை நாளில் எடுத்துரைத்துள்ள வாதங்கள்</u>:**

7.1 மேல்முறையீட்டாளரின் பிரதிநிதி திரு.D.ராஜேந்திரன் அவர்கள் மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

7.2 மேல்முறையீட்டாளரின் பிரதிநிதி தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் 23.3.2011 நாளிட்ட ஆணையை சுட்டிக்காட்டி, மன்றத்தின் தீர்வு மின்சாரசட்டம், மின்வழங்கல் விதித்தொகுப்பு, மின்சார பகிர்மான விதித் தொகுப்பு மற்றும் மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் உத்தரவு ஆகியவைகளுக்கு இணங்கதான் இருக்க வேண்டும். ஆனால் மன்றம், வாரியத்தின் 22.7.2011 மற்றும் 2.9.2013 நாளிட்ட ஆணையின்படி மேல்முறையீட்டாளரின் கோரிக்கை ஏற்புடையது அல்ல என்று தீர்வு

வழங்கியுள்ளது. எனவே, மேற்கண்ட உத்தரவு, ரத்து செய்யப்பட வேண்டும் என்று வாதிட்டார்.

7.3 மேலும், மின்சார பகிர்மான விதித் தொகுப்பின் விதி 50ஐ சுட்டிக்காட்டி, பகிர்மான விதித் தொகுப்பின் விதிகள் மின்வழங்கல் விதித் தொகுப்பு மின்சார சட்டம், மற்றும் ஒழுங்குமுறை ஆணையத்தின் உத்தரவுகளோடு சேர்ந்து படித்து புரிந்து கொள்ள வேண்டும். மேலும், விதித் தொகுப்பின் எந்த விதியாவது, மின்சார சட்டத்திற்கு இணங்க இல்லை எனில் மற்ற பகுதிகளை மட்டும் தான் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று வாதிட்டு எனவே, உரிமதாரரின் ஆணைகள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற விதிகளில் எங்கும் கூறப்படவில்லை என்றும் வாதிட்டார்.

7.4 மேலும், மின்குறைதீர்ப்பாளரின் 11.2.2016 நாளிட்ட மேல்முறையீட்டு மனு எண். 93/2015 ன் பத்தி 11.6 ஐ சுட்டிக்காட்டி, 1.9.2004 லிருந்து ஒழுங்குமுறை ஆணையம் விதித்துள்ள விதிகள்தாம் உரிமம்தாரரை கட்டுப்படுத்தும் அந்த விதிகளுக்கு புறம்பாக உள்ள வாரிய ஆணைகள் செல்லதக்கது அல்ல என்றும் வாதிட்டுள்ளார்.

7.5 மின்சார பகிர்மான விதித் தொகுப்பின் விதி 37 ஐ சுட்டிக்காட்டி, மின் இணைப்பு கொடுப்பதற்கு முன்பாக, மின்பாதை, அமைக்கப்பட்டிருந்தாலும் மின் இணைப்பு மாற்றலாம் என்பதால் இந்த வழக்கிலும், மின் இணைப்பை, விண்ணப்பத்திலுள்ள சர்வே எண். 3/1Aக்கு பதிலாக சர்வே எண்.3/1Bல் உள்ள கிணற்றில் வழங்கலாம் என்று வாதிட்டார்.

7.6 மின்சார பகிர்மான விதித்தொகுப்பின் விதி 28(a) ஐ சுட்டிக்காட்டி உரிமம்தாரர் மின்சார சட்டத்தின் பிரிவு 53 ல் உள்ள விதிகளுக்கான எந்த ஒரு கட்டுப்பாட்டையும் நுகர்வோர் மீது விதிக்க முடியும். எனவே விவசாய மின் இணைப்பு பெறுவது சம்பந்தமாக எந்த விதியும் உருவாக்க முடியாது என்று வாதிட்டார்.

7.7 மின்பகிர்மான விதி 27 (2)ன் படி விவசாய மின் இணைப்புகளை பொறுத்த வரை ஆணையம், தேசிய மின்சார கொள்கை வழிகாட்டுதலையும், சட்டத்தின் 108 வது சட்ட பிரிவின் துணைப்பிரிவு (1)ன் படி மாநில அரசு பொதுமக்களின் நலன் கருதி வெளியிடும் கொள்கை நெறிகாட்டுதலையும் பின்பற்றிதான் இருக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. விவசாயம் செழிக்க வேண்டுமெனில் மின்சாரம் விவசாயிகளுக்கு கிடைக்க வேண்டும். விண்ணப்பம் செய்து 16 வருடங்கள் கழிந்தபின்பு, அந்த விண்ணப்பம்

Duplicate என்று தள்ளுபடி செய்வது, விவசாயத்தை ஊக்குவித்தால் ஆகாது என்றும் வாதிட்டார்.

7.8 மின்பகிர்மான விதித்தொகுப்பின் 27(10) ஐ சுட்டிக்காட்டி, உரிமம்தாரர் ஒரு குடியிருப்பு (Residental) பகுதியில், தொழிற்சாலை அல்லது வெல்டிங் சம்பந்தமான மின் இணைப்புகளைத்தான் மறுக்க முடியும், வேறு எந்த மின்இணைப்புகளையும் மறுக்க முடியாது என்று வாதிட்டார்.

7.9 மின் இணைப்பு வழங்குவதை பொறுத்த வரையில் மின்சார ஒழுங்குமுறை ஆணையம் வகுத்த விதிகள்தான் உரிமம்தாரரையும் நுகர்வோரையும் கட்டுப்படுத்தும் மின் உரிமம்தாரரின் விளக்கமோ, விதிமுறைகளோ, மின் உபயோகிப்பாளரை கட்டுப்படுத்தாது. ஆணையத்தின் மின்சார பகிர்மான விதிகள் போதுமானதாக இல்லை என்றால் மின்சார பகிர்மான விதித்தொகுப்பின் விதி 51ன் படி, விதித்தொகுப்பின் மீள்பார்வை குழுக்கு விண்ணபத்து விதிமுறைகளில் மாற்றம் கொண்டு முறைபடுத்தப்படலாம் ஆனால் உரிமம்தாரர், தன்னிச்சையாக செயல்படுத்த முடியாது என்று வாதிட்டு, எனவே, எதிர்மனுதாரர் சுட்டிகாட்டும் வாரிய ஆணைகளை எடுத்துக் கொள்ளமுடியாது என்றும் வாதிட்டார்.

7.10 மின்இணைப்பு பதிவு என்பது கிணற்றின் சர்வே எண்ணை அடிப்படையாக கொண்டது அல்ல. அது விண்ணப்பிக்கும் நபரின் உரிமையை பதிவு செய்வதாகும். விண்ணப்பிக்கும் இடத்தில் தான் மின் இணைப்பு பெறவேண்டும் என்பது சட்டமும் அல்ல, கட்டாயமும் அல்ல. விவசாய செய்வதற்கு தகுந்தாற்போல், விண்ணபதாரர், அவரின் பதிவு மூப்பின் வரிசைப்படி அவர் விரும்பி எந்த இடத்திலும் விவசாய மின் இணைப்பை பெற்றுக் கொள்ளலாம். இதை மின்சார சட்டமோ, அதன் வழியில் இயற்றப்பட்ட மின்வழங்கல் விதி, மற்றும் மின்சார பகிர்மான விதி எதுவும் தடுக்காத நிலையில் மின்சார வாரியத்தின் விதிதடுக்க முடியாது என்று வாதிட்டார்.

7.11 மேலும், இந்த மேல் முறையீட்டாளர், ஏற்கனவே உள்ள மின் இணைப்பு முழுவதற்கும் உடமையாளர் அல்ல அதில் ஒரு பகுதிக்குதான் சொந்தக்காரர் ஆவார். அந்த பகுதி சொந்தத்தை கொண்டு அவருடைய நிலத்தை முழுமையாக விவசாயம் பார்க்க முடியாது. எனவே, ஏற்கனவே உள்ள மின் இணைப்பில் அவருக்கு பங்கு உள்ளது எனவே

விண்ணப்பம் Duplicate தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்ற வாதம் ஏற்புடையது அல்ல என்றும் வாதிட்டுள்ளார்.

7.12 மேல்முறையீட்டாளருக்கு 3/1B என்ற இடத்தில் ஆழ்குழாய் கிணறு உள்ளது. அந்த கிணற்றிற்கு, மேற்கண்ட விண்ணப்பத்தை மாற்றி மின் இணைப்பு வழங்க அனுமதிக்க வேண்டும் என்றும் வாதிட்டுள்ளார்.

**8.0 <u>எதிர்மனுதாரர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்</u>:**

8.1 எதிர்மனுதாரர் திரு. D. முருகானந்தன், செயற்பொறியாளர், தாராபுரம் அவர்கள் கலந்து கொண்டு, தன்னுடைய பதிலுரையிலுள்ள வாதங்கள் மீண்டும் வலியுறுத்தினார்.

8.2 செயற்பொறியாளர் மேற்கண்ட சர்வே எண்.3/1Aல் உள்ள கிணற்றில் உள்ள மின் இணைப்பு எண். 372–002–124ல் இந்த மேல்முறையீட்டாளருக்கு விண்ணப்பம் சமர்பிக்கும் பொழுது 1/6 பாகம் உரிமை உள்ளது. எனவே, ஏற்கனவே, அவருக்கு உரிமையில் பங்கு உள்ள மின் இணைப்பு உள்ள பொழுது, அவர் அதே கிணற்றிற்கு அவரின் பெயரில் மின் இணைப்பு கோருவது, ஏற்புடையது இல்லை என்றும், அந்த விண்ணப்பம், Duplicate விண்ணப்பமாக கருதப்பட்டு, தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் வாதிட்டார்.

8.3 மேலும், வாரிய ஆணையின் படி, ஒரு விண்ணப்பித்த கிணற்றில் போதுமான நீர் இல்லை என்றாலோ, அல்லது நீர் மாசுபட்டு இருந்தால் தான் வேறு கிணற்றிற்கு விண்ணப்பதாரர் மாற்றி விவசாய மின் இணைப்பு வழங்கப்படும். இங்கு அந்த நிலை இல்லை.

8.4 விண்ணப்பத்தில் தவறான சர்வே எண் தெரிவிக்கப்பட்டு இருந்தால் அந்த தவறு உண்மையானது என்று அறியும் பட்சத்தில் உரிய வருவாய் ஆவணம் பெற்று சர்வே எண் மாற்றம் செய்யப்படுகின்றது என்றும் தெரிவித்து, இந்த வழக்கு அந்த வகையிலும் இல்லை என்றும் வாதிட்டார்.

8.5 ஒழுங்குமுறை ஆணையத்தின் விதியின்படி, ஒரு சர்வே எண்ணில் ஒருவருக்கு ஒரு விவசாய மின் இணைப்புதான் வழங்கமுடியும். இங்கு ஒரே சர்வே எண்ணில் உள்ள கிணற்றின் மின் இணைப்பில் இணைப்பின் உரிமையில் பங்கு உள்ள ஒருவர் அதே கிணற்றிக்கு அவருக்கு மேலும் ஒரு மின் இணைப்பு கேட்பது மின்பகிர்மான விதி தொகுப்பின் விதி 29(2)ன்படி ஏற்படையது அல்ல.

8.6 மின்பகிர்மானவிதி 37–ல், ஒரு மின் இணைப்பு வழங்குவதற்காக மின்பாதை அமைத்த பின்பு, ஆனால் மின் இணைப்பை வழங்குவதற்கு முன்பாக மாற்ற வேண்டும் என்று கோரினால் நுகர்வோர், அதற்கு ஆகும் செலவுத் தொகையை செலுத்தினால் மாற்றலாம் என்று உள்ளது. மேற்கண்ட மாற்றம் என்பது ஒரு மின் இணைப்பு வழங்க அனுமதிக்கப்பட்டு, மின்பாதை அமைத்த பிறகு கோரப்படும் இடமாற்றம் ஆகும். ஆனால், இந்த வழக்கில் மேல்முறையீட்டாளரின் விண்ணப்பமே தகுதி அற்றது என்பது தான் எனவே, மேற்கண்ட விதி இந்த வழக்கிற்கு பொருந்தாது என்று வாதிட்டுள்ளார்.

9. <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு:–</u>

9.1 இருதரப்பு வாதங்களையும் ஆராய்ந்து பார்க்கும் பொழுது, கீழ்கண்டவைகள் இந்த வழக்கில் வழக்கெழு வினாக்களாக தெரிகின்றன.

(1) மேல்முறையீட்டாளரின் கோரிக்கையான சர்வே எண்.3/1Aல் பதிவு செய்யப்பட்டுள்ள அவரின் விண்ணப்பத்திற்கு விவசாய மின் இணைப்பு வழங்க வேண்டும் என்பது ஏற்புடையதா ?

(2) அவரின் விவசாய விண்ணப்பத்தில் சர்வே எண்.3/1Aல் என்பதற்கு பதிலாக ஆழ்குழாய் கிணறு உள்ள சர்வே எண் 3/1B என்று மாற்றம் செய்து மின் இணைப்பு வழங்க வேண்டும் என்பது ஏற்புடையதா ?

10. <u>வழக்கெழுவினா ஒன்றிற்கான தீர்வு:</u>

10.1 மேல்முறையீட்டாளர் விவசாய மின்இணைப்பு கோரி பதிவு செய்துள்ள விண்ணப்பத்திற்கு மின் இணைப்பு வழங்க வேண்டும் என்று கீழ்கண்ட வாதங்களை சமர்ப்பித்துள்ளார்.

(i) 1.9.2004 முதல் மின்சார ஒழுங்குமுறை ஆணையம் விதித்துள்ள மின்பகிர்மான விதித்தொகுப்பு மற்றும் மின்வழங்கல் விதித்தொகுப்பிலுள்ள விதிகள் தான் நடைமுறையில் உள்ளன. எனவே, உரிமைதாரரின் ஆணைகள் ஏற்கத்தக்கது அல்ல. எனவே, மேற்பார்வை பொறியாளர்/RE&I(D)ன் 22.7.2011 மற்றும் 2.9.2013 நாளிட்ட ஆணைகளின்படி மின்இணைப்பு வழங்க முடியாது என்பது தவறாகும்.

(ii) மின்சார விநியோக விதிகள் எதுவும் போதுமானதாக இல்லை என்றால், மின்சார பகிர்மான விதி 51ன் படி புதிய விதிமுறைகளை பரிசீலனை குழுவிற்கு விண்ணப்பித்து விதிமுறைகளில் மாற்றம் கொண்டு வந்து நடைமுறைபடுத்தலாம். ஆனால், மின் உரிமைதாரர் தனது விதிமுறையை எதையும் தன்னிச்சையாக செயல்படுத்த முடியாது என்றும் வாதுரைத்துள்ளார்.

(iii) மேலும், மின்சார பகிர்மான விதி 50ல் மின்பகிர்மான விதிகளை மின் வழங்கல் விதி, தமிழ்நாடு மின்கட்டமைப்பு விதித்தொகுப்பு (Grid Code) சட்டத்தின் இதர பிரிவுகள் மற்றும் இந்த சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட விதிமுறைகளுடன் சேர்ந்து படித்து புரிந்துகொள்ள வேண்டும் என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் மின்பகிர்மான கழகத்தின் எந்த விதிமுறைகளையும் இணைத்துக் கொள்ளலாம் என எங்கும் கூறவில்லை.

(iv) மின்பகிர்மான விதிகள், மின் வழங்கல் விதிகள், மின்சாரச் சட்டம் இவை எதிலும் ஒரு கிணற்றில் ஏற்கனவே மின்இணைப்பில் பங்கு இருந்தால் அவருக்கு அந்த கிணற்றில் மின்இணைப்பு வழங்க கூடாது என்று தெரிவிக்கப்படவில்லை. எனவே, மின்இணைப்பு வழங்கப்படவேண்டும்.

10.2 எதிர்மனுதாரர் கீழ்கண்ட வாதங்களை முன்வைத்துள்ளார்.

(i) மேல்முறையீட்டாளர் மின்இணைப்பு கோரும் கொமாரப்பாளையம் கிராமம், க.ச. எண்.3/1ஏ–ல் உள்ள கிணற்றில் உள்ள மின்இணைப்பு எண்.372–002–124–ல் மனுதாரருக்கு உரிமை உள்ளதால் Lr.No.SE/RE & I(D)/EE/RE/A1/F.Doc/D.906/11, dt.22.7.2011 மற்றும் SE/RE & I(D)/EE/RE/A1/F.Doc/D.652/11, dt.2.9.2013படியும் அதே கிணற்றில் மனுதாரர் பெயரில் மின்இணைப்பு வழங்கவோ வேறு கிணற்றிற்கு மாற்றம் செய்யவோ முடியாது.

(ii) ஏற்கனவே தனக்கு உரிமையுள்ள விவசாய மின்இணைப்பு உள்ள கிணற்றில் மேலும், தனது பெயருக்கு ஒரு விவசாய மின்இணைப்பு வேண்டி விண்ணப்பம் செய்தால் அது, Duplicate application என்று எடுத்து கொள்ளப்பட்டு அந்த விண்ணப்பம் பரிசீலனைக்கு எடுக்க ஏற்றது அல்ல என்பது சரி என்றும் வாதிட்டுள்ளார்.

(iii) மேல்முறையீட்டாளர் குறிப்பிட்டுள்ள விதிகள் அனைத்தும் மாண்புமிகு ஒழுங்குமுறை ஆணையத்தால் வகுக்கப்பட்ட கொள்கை முறையிலன வழிகாட்டல்கள் ஆகும். ஆனால், அன்றாட

செயல்பாட்டு முறைகளுக்கான உத்தரவுகள் மின் வாரியத்தால் அவ்வப்பொழுது அளிக்கப்பட்டு வருவதன் அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

(iv) எதிர்மனுதாரர் **22.7.2011** மற்றும் **2.9.2013** ஆகிய வாரிய ஆணைகளை சுட்டிக்காட்டி மேல்முறையீட்டாளரின் கோரிக்கை ஏற்புடையது அல்ல என்று வாதிட்டுள்ளதால் அந்த ஆணைகளின் குறிப்பிடப்பட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

*"<u>Lr.No.SE/RE&I(D)/EE/RE/A1/F.Doc/D.986/11 dt.22.7.2011</u>*

*To avoid effecting of more than one agricultural service connection in the name of same person in the same well/bore well and to avoid SF correction for such cases the following instructions are issued.*

*Necessary undertaking may be obtained from the applicant at the time of registering the application stating that :*

*(i) There is no other application registered and pending in his name for the same well/bore well and no agricultural service connection availed in the well/bore well in his name.*
*(ii) If such type of cases noticed then the application is liable for cancellation and no change of well is permitted in such cases.*

*<u>Lr.No.SE/RE&I(D)/EE/RE/A1/F.Doc/D.652/13 dt.2.9.2013</u>*

*1) It is to be stated that there cannot be two agricultural services in one person's name for an open well. Hence, if a consumer gets another agricultural service in the same well due to partition/legal heir and applied for name transfer of the first service connection in the name of his father which is acquired by him due to partition the same agricultural service has to be either merged with the other service which is in the name of the son in the same well or second service has to be dismantled while effecting name transfer of the father's service.*

*2) Shifting of service is eligible only for the following cases.*

*(i) Due to dryness of well and insufficient water in the well.*

*(ii) Due to water pollution in the existing well/bore well.*

(V) 22.7.2011 நாளிட்ட ஆணையினை கூர்ந்துபடிக்கும்பொழுது நாம் அறிவது, ஒரு கிணற்றில் ஒருவரது பெயரில் ஒன்றுக்கு மேற்பட்ட மின் இணைப்புகள் வழங்கப்படாமல் இருக்கவும் சர்வே எண் திருத்தம் வராமலும் இருக்க விண்ணப்பத்தை பதிவு செய்யும் பொழுது கீழ்கண்ட உறுதியை விண்ணப்பதாரரிடம் பெறவேண்டும்.

(அ) வேறு விண்ணப்பம் விண்ணப்பதாரரின் பெயரில் அந்த கிணறு/ஆழ்துளை கிணறு நிலுவையில் இல்லை என்றும் விவசாய மின்இணைப்பு அவரின் பெயரில் அந்த கிணற்றில் /ஆழ்துளை கிணற்றில் இல்லை.

(ஆ) அவ்வாறு அறியப்பட்டால் விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்படும் கிணறு மாற்றம் அனுமதிக்கப்படமாட்டாது.

(vi) 2.9.2013 நாளிட்ட ஆணையினை கூர்ந்து படிக்கும்பொழுது நாம் அறிவது, ஒருவர் பெயரில் ஒரு கிணற்றில் இரண்டு மின்இணைப்புகள் இருக்க முடியாது. ஒரு நுகர்வோருக்கு பாகப்பிரிவினையின்படி ஒரு கிணற்றில் மேலும், ஒரு மின்இணைப்பு கிடைக்கப்பெற்றால் ஏற்கெனவே அவர் பெயரிலுள்ள மின்இணைப்புடன் இந்த மின்இணைப்பையும் சேர்க்க வேண்டும் அல்லது இரண்டாவது (பெயர் மாற்றத்தால்) பெறும் மின்இணைப்பு dismantle பண்ணப்படவேண்டும்.

(vii) மேல்முறையீட்டாளர் இந்த ஆணைகள் உரிமம்தாரரின் ஆணை எனவே, கட்டுப்படுத்தாது என்று வாதிட்டார்.

**10.3** ஒரு சர்வே எண்ணில் ஒருவருக்கு எத்தனை விவசாய மின்இணைப்புகள் வழங்க முடியும் என்பது சம்பந்தமாக நான் மின்சார பகிர்மான விதித்தொகுப்பின் வித 29(2)ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

***" 29 Service Lines :***

*(1) xxx xxx xxx*

*(2) In agricultural connections where the consumer requires a separate service connection for utilizing energy for radios and other appliances including domestic lighting in the farm house, more than one service connection in the same Survey Field Number /sub-divided survey field number will be permitted.*

*(3) xxx xxx xxx*

**10.3** மேற்கண்ட மின்சார பகிர்மான விதி **29(2)** ஐ கூர்ந்து படிக்கும்பொழுது நாம் அறிவது பண்ணை வீட்டில் வீட்டின் பயன்பாடு மற்றும் பிற பயன்பாட்டு கருவிகள் பயன்படுத்தவும் தனி மின்இணைப்பு தேவையெனில் வேளாண் மின்இணைப்போடு கேட்டால் ஒரு புல எண்ணில் / துணைப் பிரிவு புல எண்ணில் ஒன்றுக்கும் மேற்பட்ட மின்இணைப்புகள் வழங்கலாம்.

**10.4** மேற்கண்ட மின்சார பகிர்மான விதித்தொகுப்பின் விதி **29(2)** இன் படி ஒரு புல எண்ணில் ஒருவருக்கு ஒரு விவசாய மின்இணைப்பு தான் வழங்க முடியும் என்று தெரிகிறது. என் முன்னால் உள்ள வழக்கில் ரீ சர்வே எண்.3/1ஏ–ல் உள்ள கிணற்றில் ஏற்கனவே உள்ள மின் இணைப்பின் உரிமையில் மேல்முறையீட்டாளருக்கு பங்கு உள்ளதால் மேலும் ஒரு மின்இணைப்பு மேல்முறையீட்டாளர் பெயரில் பெற முடியாது என்று தீர்வு செய்யப்படுகிறது.

## 11. <u>வழக்கெழு வினா இரண்டிற்கான தீர்வு</u>

**11.1** மேல்முறையீட்டாளர், தன்னுடைய விவசாய விண்ணபத்திலுள்ள சர்வே எண்.3/1ஏ–ல் உள்ள கிணற்றிற்கு பதிலாக 3/1பி என்ற சர்வே எண்ணில் உள்ள கிணற்றிற்கு மின்இணைப்பை வழங்க வேண்டும் என்று கோரினார்.

**11.2** மின்இணைப்பு பதிவு என்பது கிணற்றின் சர்வே எண்ணை அடிப்படையாக கொண்டது அல்ல. அது விண்ணப்பிக்கும் நபரின் உரிமையை பதிவு செய்வது ஆகும். விண்ணப்பிக்கும் இடத்தில் தான் மின்இணைப்பு பெறவேண்டும் என்பது சட்டமும் இல்லை, கட்டாயமும் இல்லை. தேவைக்கு ஏற்ப விவசாய நிலம் பயிர் செய்வதற்கு ஏற்ற வகையில் விண்ணபதாரர் எந்த இடத்திலும் வரிசைப்படியான முதன்மையை விட்டுத்தராமல் மின் இணைப்பை பெற உரிமை உண்டு. இதை மின்சார சட்டமோ, அதன் வழியில் இயற்றப்பட்ட மின் வழங்கல் விதி (Supply Code) மற்றும் மின்சார பகிர்மான விதி (Distribution Code) தடுக்காத நிலையில் மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் விதி தடுக்க முடியாது என்றும் மேல்முறையீட்டாளர் வாதிட்டுள்ளார்.

**11.3** மேல்முறையீட்டாளர், மின்சார பகிர்மான விதித்தொகுப்பின் விதி 37–ஐ சுட்டிக்காட்டி, மின்இணைப்பு வழங்குவதற்கு முன்பாகவும் மின்இணைப்பை மாற்றி அமைக்க விதி உள்ளது. எனவே, மின்இணைப்பை 3/1பி–ல் உள்ள ஆழ்குழாய் கிணற்றிற்கு வழங்க வேண்டும் என்று வாதிட்டார்.

**11.4** ஒரு விவசாய மின் இணைப்பு கோரி பதிவு செய்த விண்ணப்பத்தை பதிவு செய்து 16 வருடங்கள் கழிந்த பின்பு அந்த விண்ணப்பத்தை தகுதி அற்றது என்று தள்ளுபடி செய்வது விவசாயத்தை ஊக்குவித்தல் ஆகாது என்றும் வாதாடினார்.

**11.5** எதிர்மனுதாரர், மேற்கண்ட விண்ணப்பம் Duplicate application என்று தள்ளுபடி செய்யப்படவேண்டியது . எனவே, சர்வே எண் மாற்றம் செய்து மின்இணைப்பு வழங்க முடியாது என்று வாதிட்டுள்ளார்.

**11.6** மேலும், ஒரு கிணற்றில் நீர் இல்லை என்றால் அல்லது போதுமான நீர் இல்லை என்றாலும் அல்லது தண்ணீர் மாசுப்பட்டுள்ளது என்ற நிலையில்தான் விவசாய மின்இணைப்பு கோரும் கிணற்றை மாற்றம் செய்யமுடியும். இங்கு அது போன்ற காரணங்கள் இல்லை என்றும் வாதிட்டுள்ளார்.

**11.7** மின்சார பகிர்மான விதித்தொகுப்பின் விதி 37ன் படி ஒரு மின்பாதை அமைக்கப்பட்ட பின்பு ஆனால் புது மின்இணைப்பு வழங்கப்படாத நிலையில், மேற்கண்ட மின்இணைப்பை மாற்றலாம். ஆனால்,இங்கு மேல்முறையீட்டாளரின் விண்ணப்பம் ஏற்கனவே மின்இணைப்பு உள்ள கிணற்றிற்கு மீண்டும் இணைப்பு கோருவதால் அது duplicate application என்று தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றும் எனவே, அந்த விதி இந்த வழக்கிற்கு பொருந்தாது என்று வாதிட்டுள்ளார்.

**11.8** மேல்முறையீட்டாளர் விண்ணப்பம் பதிவு கிணற்றின் சர்வே எண்ணை அடிப்படையாக கொண்டது அல்ல, அது விண்ணப்பிக்கும் நபரின் உரிமையை பதிவு செய்வது ஆகும் என்று வாதிட்டுள்ளதால் நான் விண்ணப்பத்தை ஆராய விரும்புகிறேன். ஒழுங்குமுறை ஆணையத்தால் அனுமதிக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தின் மாதிரி படிவம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

***" FORM-2***

*Application Form for Agriculture Service connection [refer clause 27(2)]*

*APPLICATION FOR SUPPLY OF POWER TO AGRICULTURAL PUMP SETS*

*(Note: The application should be signed by the owner of the well, if there are partners, all must sign or consent to be Given by co-owners)*

*To*
*The Designated Engineer*
*(Address of the Licensee's Distribution Centre)*

1. *Name of owner of the well or partners*
2. *Full residential address of the owner or partners*
3. *S.F. No. in which the well is situated*
4. *Revenue village name, Taluk and District*
5. *Area and type of land to be irrigated by this well (Wet / Dry)*
6. *Horse Power of motor pump sets proposed to be installed.*
7. *Type of pump set (Centrifugal/ Submersible/ Air compressor)*
8. *Consent to abide by R&C of Licensee with regard to duration of supply*

*It is certified, I am the sole owner of the well / this application is signed by all partners*

*Place :*

*Date :*
*Signature of Applicant/ Partners*

*Note : The document such as FMB map showing the location of the well, patta, chitta, adangal etc., shall be enclosed with the application.*

*Date of receipt in the*
*Office of the Engineer,*
*…………………………………………...*
*…………………………………………..*
*…………………………………………...*

*Certified that the open well/bore well and lands and........……...cenmeasuring.................................……..acres ts in S.F.No……...............Village……………………….........……of……….................………Taluk is Exclusively owned by*

*Thiru……………........................…………….......................s/o………………………………….........of ……………………………..Village.*

*Jointly owned by*

*List of owners (1)……………………………………….s/o……………………..*

*(2) ……………………………………….s/o………………………*

*(3) ……………………………………….s/o……………………..*

*Certified that Thiru ……………………………………….s/o……………………… is small / big farmer(s)*

*Village Administrative Officer.*

**11.9** மேற்கண்ட விண்ணப்பத்தில் கிணற்றின் உரிமையாளரின் பெயர் வரிசை எண்.1–ல் கோரப்பட்டுள்ளது. கிணறு அமைந்துள்ள புல எண் தெரிவிக்கும்படி வரிசை எண்.3ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. வரிசை எண்.5 ல் எவ்வளவு ஏரியா மேற்கண்ட கிணற்றின் மூலம் விவசாயம் செய்ப்படவேண்டும் என்று தெரிவிக்க கோரப்பட்டுள்ளது. மேலும், கிணற்றின் உரிமைக்கு சான்று அளிக்கவும் கோரப்பட்டுள்ளது.

11.10 மேற்கண்ட விபரங்களை கூர்ந்து ஆராய்ந்து பார்க்கும்பொழுது எல்லா தகவல்களும், உரிமை ஆவணமும் சம்பந்தப்பட்ட கிணற்றிற்கு தான் கோரப்பட்டுள்ளதால் விண்ணப்பப் பதிவும், சம்பந்தப்பட்ட கிணற்றிற்குதான் என்று எடுத்துக்கொள்ள முடியும் என்று நான் கருதுகிறேன்.

11.11 எனவே, மேல்முறையீட்டாளரின் விண்ணப்ப பதிவு என்பது கிணற்றின் சர்வே எண்ணை அடிப்படையாக கொண்டது அல்ல அது விண்ணப்பிக்கும் நபரின் உரிமையை பதிவுசெய்வது என்ற வாதம் ஏற்புடையது அல்ல என்று நான் கருதுகிறேன்.

11.12 மேல்முறையீட்டாளர், மின்பகிர்மான விதிதொகுப்பின் விதி 37–ஐ சுட்டிக்காட்டி மேற்கண்ட விதியின்படி சர்வே எண்.3/1ஏ–ல் உள்ள கிணற்றிற்கு பதில் 3/1பி–ல் உள்ள கிணற்றிற்கு விண்ணப்பத்தை மாற்றி வழங்க வேண்டும் என்று கோரியுள்ளதால் அந்த மின்சார பகிர்மான விதித்தொகுப்பின் விதி 37 கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

***" 37 SHIFTING OF SERVICE CONNECTION :***

*(1) The cost of shifting a new service connection for which line is laid but service connection is yet to be effected shall be borne by the intending consumer. The intending consumer shall pay the above charges in advance in full. The copy of the estimate shall be given to the intending consumer. The shifting work will be taken up only after the payment is made. The estimate will cover the following:*

*(i) Materials dismantled in the old site and reusable shall be used in the new site as far as possible.*

*(ii) 10% of the present value of the dismantled and reusable materials towards charges for dismantling and charges for loading, unloading, transport to the new site/store.*

*(iii) Cost of the new materials required for the shifting work.*

*(iv) Add 5% of the cost of new materials towards loading, unloading and transport to new site.*

*(v) Add 10% of the present value of all the materials to be erected in the new site towards erection charges.*

*(vi) 5% of the present value of retrievable scrap materials towards transport charges.*

*(vii) Due credit shall be given to the consumer/applicant as below but however limited to the total estimated cost of new work:*

*(a) Book value/written down value subject to a minimum of 20% of the cost of retrievable and reusable materials but not used in the new site*

*(b) .Scrap value on the retrievable but not reusable materials at not less than 10% of its original value.*

*(2) After completion of the work, a revised estimate shall be prepared with a copy to the intending consumer based on the actual cost of materials, loading, unloading, transport and erection charges. If the original estimate cost is more than the revised estimate, the balance shall be refunded to the intending consumer within 3 months. If the original estimate cost is less than the revised estimate, the difference shal be collected from the intending consumer.*

*(3) With regard to shifting of existing service connection, the consumer shall pay all the arrears due to the Licensee, apart from the above shifting charges."*

**11.13** மேற்கண்ட விதியினை கூர்ந்து படிக்கும்பொழுது நாம் அறிவது, ஒரு மின்பாதை அமைக்கப்பட்ட பின்பு மின் இணைப்பை வழங்குவதற்கு முன்பு, அந்த மின்இணைப்பை வேறு இடத்திற்கு மாற்ற விரும்பினால் மாற்றம் கோரும் விண்ணப்பதாரர் அந்த மாற்றத்திற்கான முழு செலவு தொகையை ஏற்கவேண்டும் என்றும் அவற்றை முன்பணமாக செலுத்திய பின்பு மாற்றும் வேலை ஆரம்பிக்கப்படும் என்று தெரிகிறது.

**11.14** மேற்கண்ட விதி ஒரு மின்இணைப்பு கோரும் விண்ணப்பத்தின் மதிப்பீடு அனுமதிக்கப்பட்டு மின்பாதை அமைத்த பின்பு, மின் இணைப்பை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும் என்று விண்ணப்பதாரர் கோரும்பொழுது பயன்படுத்தலாம்.

**11.15** ஆனால், என் முன்னால் உள்ள வழக்கில் மின்இணைப்பிற்கான மதிப்பீடு அனுமதிக்கப்படவில்லை. எனவே, மின்பாதையும் அமைக்கப்படவில்லை. மேலும், ஏற்கனவே விண்ணப்பதாரருக்கு அந்த சர்வே எண்ணில் உள்ள கிணற்றிற்கு வழங்கப்பட்ட மின் இணைப்பின் உரிமையில் பங்கு உள்ளதால் விண்ணப்பம் தகுதியற்றது என்ற நிலையில் உள்ளது. அந்நிலையில் மேல்முறையீட்டாளரின் மேற்கண்ட வாதம் ஏற்புடையது அல்ல என்று தீர்வு செய்கிறேன்.

**11.16** ஒரு விவசாய விண்ணப்பத்தை பதிவு செய்து 16 வருடங்கள் கழிந்தபின்பு அந்த விண்ணப்பம் தகுதியற்றது என்று தெரிவிப்பது போன்ற நிகழ்வுகள் இனி வருங்காலத்தில் நிகழாமலிருக்க உரிமம்தாரர் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறது.

**12. <u>முடிவுரை</u>**

**12.1** என்னுடைய வழக்கெழு வினா ஒன்று மற்றும் இரண்டிற்கான தீர்வின்படி, இந்த மேல்முறையீட்டாளரின் கோரிக்கை ஏற்புடையது அல்ல என்று தீர்வு செய்கிறேன்.

12.2 மேற்கண்ட தீர்வுடன் மேல்முறையீட்டு மனு எண்.16/2016 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்
1) திரு. P.ரங்கநாதன்,
த/பெ. பழனிச்சாமி,
கொமாரபாளையம் அஞ்சல்,
மூலனூர் – வழி,
தாராபுரம் வட்டம் – 638 106.

2) செயற்பொறியாளர்/இ & ப,
தாராபுரம்,
உடுமலைப்பேட்டை மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
TANGEDCO Complex,
உடுமலைப்பேட்டை ரோடு, தாராபுரம் – 638 656.

3) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின் நுகர்வோர் குறைதீர்க்கும்,
உடுமலைப்பேட்டை மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
TANGEDCO,
எரிபாளையம், திருப்பூர் ரோடு, உடுமலைப்பேட்டை– 642 126.

4) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

5) செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர், சென்னை – 600 008.

6) உதவி இயக்குநர் (கணினி) – **மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர், சென்னை – 600 008.